செ.வெ.எண்:01 நாள்:02.01.2017

# அரியலூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.01.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் **இன்று** (02.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 265 மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள், இம்மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் மூலம் பவர்க்ரிட் கார்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (மத்திய எரியசக்தி துறையின் கீழ் இயங்கும் ஒரு முன்னணி நவரத்னா பொதுத்துறை நிறுவனம்) மருத்துவ ஊர்திகளை தேவைப்படும் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களுக்கு நாடு முழுவதும் நன்கொடையாக வழங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார மையத்திற்கு அரியலூர் மாவட்டம் பவர்க்ரிட் நிறுவனத்தின் மூலம் (சுமரர் **ரூபாய் 7,50,000/-** மதிப்புள்ள குளிர் சாதன வசதியுடன் கூடிய) டாடா விங்கேர் மருத்துவ ஊர்தியை அரியலூர் மாவட்ட துணை இயக்குனர் சுகாதார பணிகள் திரு.சோமசுந்தரம் அவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வாகன சாவியை வழங்கி, கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் வட்டார வளர்ச்சி அலுவலகராகப் பணிபுரிந்து 18.10.2016 அன்று பணியிடையே காலமான திரு.நா.சங்கநாராயணன் என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.ச.விக்னேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் நிலையிலான பணி நியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெங்கநாதன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) திருமதி.மங்கலம், கூடுதல் பொது மேலளர் (பவர்க்ரிட்) திரு.சுரேந்திரன், திரு.சரவணன் மற்றும் அரியலூர் பவர்க்ரிட் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.